# EASTERN UNIVERSITY SRI LANKA

## FACULTY OF ARTS AND CULTURE

### First Year Examination in Arts & Culture – Repeat (External) - 2017

### CC 104 முகாமைத்துவக் கற்கைகள்

LIBRARY 2 SEP 2018 EASTERN UNIVERSITY, SRI LANKA

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் - 3 மணித்தியாலங்கள்

---

01. a) *"முகாமைத்துவம் என்ற பதம் இன்று எல்லோராலும் மிக முக்கியமாக பேசப்பட்டு வருகின்ற ஓர் பதமாகும். நிறுவனங்கள் எவ்வகையாயினும், எவ்வளவாகினும் அவற்றின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் முகாமைத்துவம், மிகமுக்கியமானதாக விளங்குகின்றது. இதற்கமைய முகாமையாளர் குறிப்பிட்ட நிலைமையினை ஆராய்ந்து அந்நிலைமைக்கு ஏற்ப பொருத்தமான திட்டங்களை வகுப்பதற்கு தேவையான ஆற்றல்களையும் தேர்ச்சித் திறன்களையும் கொண்டிருக்க வேண்டும்".*

இக்கூற்றின் அடிப்படையில் முகாமைத்துவம் என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறி, பொதுவாக முகாமையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய தேர்ச்சித் திறன்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக

(08 புள்ளிகள்)

b) *"முகாமையாளர்கள் நிறுவனத்தின் இலக்கினை அடையும் பொருட்டு பல்வேறு வகையான சவால்களை வெற்றிகொள்ளல் வேண்டும்."*

பொதுவாக முகாமையாளர் ஒருவர் எதிர்நோக்கும் பிரதான முகாமைத்துவ சவால்களை அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

c) *"ஹென்றி பயோலினால் எடுத்துரைக்கப்பட்ட முகாமைத்துவம் தொடர்பான தத்துவங்கள் தற்காலத்திலும் வெகுவாக பிரயோகிக்கப்படுகின்றன இவை பயோலின் முகாமைத்துவ தத்துவங்கள் என அழைக்கப்படுகின்றது."*

இத் தத்துவங்கள் எவ்வாறு இன்றும் நிறுவன வெற்றிக்கு பங்களிப்பு செய்கின்றன என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. a) *"ஜப்பானிய நிறுவனங்களின் சிறந்த செயற்பாடிற்கு காரணம் சிறந்த முகாமைத்து ஆகும்".*

இக்கூற்றின் அடிப்படையில் ஜப்பானிய முகாமைத்துவத்தில் காணப்படும் சி அம்சங்களை அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளி

b) *"நிறுவனத்தினைச் சூழ்ந்துள்ள, நிறுவனத்துடன் தொடர்புடைய காரணிகள் ய சூழல் காரணிகள் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. சூழலில் ஏற் மாற்றங்கள் நிறுவனத்திலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன."*

நிறுவனத்தின் நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் சூழற் காரணிக பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிக

c) *"திட்டமிடல் எனப்படுவது நிறுவனத்தின் நோக்கத்தினை (Objective) வரையறு அதனை அடையும் பொருட்டு செயற்பாடுகளைத் தீர்மானித்து அவற்றி ஒன்றிணைத்துக் கொள்வதனைக் குறிக்கின்றது".*

பொதுவாக நிறுவனத்தின் நோக்கம் (Objective) எத்தகைய பண்புகளுடன் காணப் வேண்டும் என்பதை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

(06 புள்ளிக

(மொத்தம் 20 புள்ளிகள்

03. a) *"திட்டமிடலானது ஓர் நிறுவனத்தின் முதன்மையானதும், முக்கியமானதுமா முகாமைத்துவ செயற்பாடாக கருதப்படுகின்றது. இத்திட்டமிடலானது நிறுவனங்களி வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் மிக முக்கியமாக காணப்படுவதுடன் வியாபாரச் சூழலி ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கேற்ப நிறுவன செயற்பாட்டு உபாயங்களை வடிவமைத்துக்கொள்ளவும் வகை செய்கின்றது"*

இக்கூற்றின் அடிப்படையில் திட்டமிடல் செயல் முறையில் காணப்படும் பிரதா படிமுறைகளை விளக்குக.

(08 புள்ளிகள்

b) *"நிறுவனம் ஒன்றில் ஒழுங்கமைத்தலை மேற்கொள்ளும் போது பல்வேறு தத்துவங்க கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்".*

இக்கூற்றின் அடிப்படையில அவ்வாறான ஒழுங்கமைத்தல் தத்துவத்துவங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

c) *"நிறுவனங்களில் ஊழியரிடல் எனப்படுவது மனிதவள திட்டமிடல், ஆட்சேர்ப்பு, தெரிவு, பயிற்சி அளித்தல், செயல்திறனை மதிப்பிடல், விருத்தி செய்தல் ஆகியவற்றினைக் கொண்ட முகாமைத்துவச் செயற்பாடுகளைக் குறிக்கின்றது."*

நிறுவனங்கள் பொதுவாக தமக்குத் தேவையான ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள கையாளும் பிரதான வகைகளை அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. a) *"வினைத்திறனான தலைமைத்துவம் ஒரு நிறுவனத்தில் காணப்படாதுவிடின், அந்நிறுவனத்தின் முகாமைத்துவமும் வினைத்திறனற்றதாகக் காணப்படும். நிறுவனத்தின் முழுமொத்த முகாமைத்துவ செயற்திறனையும் அதிகரிக்க ஒரு முகாமையாளர் தலைமைத்துவ பங்குகளை விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்."*

சிறந்த தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய வலுக்களை (Power) அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

b) *"முறைசார் மற்றும் முறைசாரா தொடர்பாடலானது நிறுவனத்தில் கிடையான மற்றும் செங்குத்தான பாய்ச்சலைக் கொண்டிருக்கும். தொடர்பாடலின் ஒரு பகுதியாக வினைத்திறனான செவிமடுத்தல் காணப்படும். இதற்காக ஒவ்வொரு சொல்லையும் தெளிவாகக் கூறுதல் வேண்டும்."*

வினைத்திறனான செவிமடுத்தலுக்குத் தேவையான விதிகளை விளக்குக

(06 புள்ளிகள்)

c) *"கட்டுப்படுத்தல் எனப்படுவது, திட்டமிட்டபடி கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றதா என உறுதிப்படுத்தி கொள்வதனைக் குறிக்கும். இக்கட்டுப்படுத்தலானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல படிமுறைகளைக் கொண்டுள்ளது."*

இக்கூற்றின் அடிப்படையில் சிறந்த கட்டுப்பாட்டு செய்முறை கொணடிருக்க வேண்டிய அம்சங்களைக் பட்டியலிட்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. a) “தற்போதைய காலகட்டத்தில் பேசப்படுகின்ற ஒரு விடயமாக குழு வேலை காணப்படுகின்றது. இது நிறுவனத்தில் இணைந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.”

இக்கூற்றின் அடிப்படையில் பொருத்தமான உதாரணத்தைப் பயன்படுத்தி “இணைந்த தாக்கம்” (SYNERGY) எனும் பதத்தினை விளக்குக.

(06 புள்ளிகள்)

b) நடத்தைசார் விஞ்ஞானிகளால் முன்வைக்கப்பட்ட ஒரு எண்ணக்கருவே தூண்டுதலாகும். மேலும் இது தற்போதைய காலகட்டத்தில் உள்ளடக்கக் கோட்பாடு (Content Theory) மற்றும் செயன்முறைக் கோட்பாடுகளால் (Process Theory) விளக்கப்படுவதாகக் காணப்படுகிறது.

இக்கூற்றின் அடிப்படையில் “தூண்டுதல்” என்னும் பதத்தினால் நீர் விளங்குவது யாது எனக்கூறி, மேற்கூறப்பட்ட இரண்டு கோட்பாடுகளையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(08 புள்ளிகள்)

c) ஓர் நிறுவனம் மிகையான அல்லது குறைவான கட்டுப்பாட்டினை மேற்கொள்கின்றபோது ஏற்படக்கூடிய பாதிப்புக்களை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)